வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : மலர்விழி

தேதி : 10.07.2026 நேரம் : மாலை 6.10 மணி

---

<u>*தலைப்புச் செய்திகள்*</u>

- இந்தியா, ஆஸ்திரேலியா நாடுகளுக்கும் இடையே, வளர்ச்சிக்கான பல புதிய வாய்ப்புகள் இருப்பதாக, பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.
- பாதுகாப்பான எல்லை, செழிப்பான எல்லைப் பகுதி, மற்றும், விழிப்புணர்வுள்ள சமூகம் ஆகியவை, நாட்டை பாதுகாக்கும் என்று, மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா கூறியுள்ளார்.
- நாட்டின் 50 சதவிகிதத்திற்கும் அதிகமான மின்சாரத் தேவை, தூய்மையான எரிசக்தி மூலம் பெறப்பட்டதாக, புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் துறை அமைச்சர் திரு. பிரல்ஹாத் ஜோஷி இன்று தெரிவித்தார்.
- செயற்கை நுண்ணறிவு மூலம் போலி செய்திகளை கண்டறிதல் என்ற தலைப்பிலான பயிலரங்கு, இன்று புதுச்சேரியில் நடைபெற்றது.

------------------------------

<u>*மோடி-ஆஸ்திரேலியா* 1 (11)</u>

இந்தியா, ஆஸ்திரேலியா நாடுகளுக்கு இடையே, வளர்ச்சிக்கான பல புதிய வாய்ப்புகள் இருப்பதாக, பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார். இந்தோ-பசிபிக் பகுதிகளில் பாதுகாப்பு, முதலீடு, இருநாட்டு மக்களுக்கு இடையிலான உறவுகள் உள்ளிட்டவை குறித்து ஆஸ்திரேலியா பிரதமர் திரு. அந்தோணி அல்பானீசுடன் விவாதித்ததாக பிரதமர் தெரிவித்தார். இந்தியா, ஆஸ்திரேலியா தலைமை செயல் அதிகாரிகள் மன்றத்தில், 2022ஆம் ஆண்டு ஒப்பந்தத்தின் காரணமாக, இருதரப்பு வர்த்தகம், 55 சதவிகிதம் அதிகரித்து இருப்பது குறித்து வணிகத்

தலைவர்கள் பாராட்டியதை பிரதமர் சுட்டிக் காட்டினார். மேலும், இருதலைவர்களும், விரிவான பொருளாதார ஒத்துழைப்பு ஒப்பந்தத்திற்கான பேச்சு வார்த்தைகளை நடத்தினர். இதுகுறித்த ஒரு செய்தித் தொகுப்பு……

(வாய்ஸ்)

*மோடி-ஆஸ்திரேலியா* 2 (18)

(வாய்ஸ்)

பிரதமர் திரு. நரேந்திர மோடியின் இந்த பயணத்தின் போது, அங்குள்ள மார்வல் மைதானத்தில், வெளிநாடு வாழ் இந்தியர்கள் சுமார் 25 ஆயிரம் பேர் கொண்ட கூட்டத்தில் இருதலைவர்களும் உரையாற்றினர். அப்போது பேசிய பிரதமர் திரு. நரேந்திர மோடி, இந்தியா-ஆஸ்திரேலியா உறவை, ஒரு உயிரோட்டமுள்ள பாலம் என்று புகழாரம் சூட்டினார். ஆஸ்திரேலியா பிரதமர் திரு. அல்பானீஸ் பேசுகையில், புலம்பெயர்ந்தோர் சமூகத்தை, ஆஸ்திரேலியாவின் செழிப்பை இயக்கும் ஒரு பன்முக கலாச்சார சக்தி மையம் என்று பாராட்டினார்.

ஆஸ்திரேலியா பயணத்தின் கடைசி நாளான இன்று பிரதமர் திரு. நரேந்திர மோடி வெளியிட்டுள்ள சமூக ஊடகப் பதிவில், ஆஸ்திரேலியாவின் எதிர்க்கட்சித் தலைவர் திரு.Angus Taylor-ஐ சந்தித்து, ஆக்கப்பூர்வமான கருத்துக்களை பகிர்ந்து கொண்டதாக தெரிவித்தார். இந்த சந்திப்பின் போது, நமது தேசத்தின் உண்மையான நண்பர் பிரதமர் திரு. மோடி என்று பாராட்டிய திரு. ஆங்கஸ் டெய்லர், சர்வதேச சூர்யசக்தி கூட்டமைப்பு, மற்றும், யுரேனியம் ஏற்றுமதி போன்ற முக்கிய முன்னெடுப்புகளுக்கும் அவர் ஆதரவு அளித்தாக கூறினார். முன்னதாக, இரு நாட்டுத் தலைவர்களும் நேற்று மெல்பர்னில் நடைபெற்ற வருடாந்திர உச்சி மாநாட்டில் பங்கேற்றனர். இந்த சுற்றுப் பயணத்தின் போது,

மோடி-ஆஸ்திரேலியா 3 (9)

புகழ்பெற்ற மெல்பர்ன் கிரிக்கெட் மைதானத்தில் இரு தலைவர்களும், இந்தியா-ஆஸ்திரேலியா விளையாட்டு ஒத்துழைப்புக்கான செயல் திட்டத்தை அதிகாரப்பூர்வமாக தொடக்கி வைத்தனர். இந்தியா 2030 காமன்வெல்த் விளையாட்டு போட்டிகளுக்கும், ஆஸ்திரேலியா 2032 பிரிஸ்பேன் ஒலிம்பிக் போட்டிகளுக்கும் தயாராகி வரும் வேளையில், இந்த நிகழ்வு ஒரு வரலாற்று சிறப்புமிக்க மைல்கல் என்று, கருதப்படுவதும் குறிப்பிடத்தக்கது. மேலும், ஆஸ்திரேலியா ஆண்கள் பிக் பாஷ் லீக்-ன் தொடக்கப் போட்டி, இந்த ஆண்டு டிசம்பர் மாதம் சென்னையில் நடைபெறும் என்றும், அறிவிக்கப் பட்டுள்ளது.

------------------------------

சி.பி. ராதாகிருஷ்ணன் (12)

வந்தே மாதரம் தேசிய பாடல், தேசத்திற்கான கடமையை நிலைநாட்டி, விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு உத்வேகம் அளித்ததாக குடியரசுத் துணைத் தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார். ஷிம்லாவில், வந்தே மாதரம் சர்வதேச கருத்தரங்கில் இன்று உரையாற்றிய அவர், இப்பாடல், விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு, துணிச்சலையும், நம்பிக்கையையும் ஏற்படுத்தியதாக கூறினார். தேசப்பக்தி என்பது வெறும் வார்த்தைகளாக மட்டுமல்லாமல், அனைத்து செயல்களிலும் வெளிப்படுத்தப்பட வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார். வந்தே மாதரம் தேசியப் பாடல், மற்றும், சர்தார் வல்லபாய் பட்டேலின் சீரிய கொள்கைகளுடன், ஒருங்கிணைந்த இந்தியாவை உருவாக்க, நாட்டு மக்கள் உறுதியேற்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

------------------------------

அமித்  ா (20)

பாதுகாப்பான எல்லை, செழிப்பான எல்லைப் பகுதி, மற்றும், விழிப்புணர்வுள்ள சமூகம் ஆகிய மூன்றும் இணைந்து, நாட்டை பாதுகாப்பானதாக மாற்றும் என்று, மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா கூறியுள்ளார். புதுடெல்லியில், எல்லை மாவட்டங்களின் காவல் கண்காணிப்பாளர்கள் மாநாட்டில் உரையாற்றிய அவர், துடிப்பான கிராமங்கள் திட்டத்தின் கீழ், இடம்பெயர்வை தடுக்கவும், வேலை வாய்ப்புகளை உருவாக்கவும், அரசின் நலத் திட்டங்கள் 100 சதவிகிதம் செயல்படுத்தப் படுவதை உறுதி செய்ய, முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரிவித்தார். எல்லை உள்கட்டமைப்பு, 400 சதவிகிதம் அதிகரிக்கப் பட்டுள்ளது என்றும், ஆயிரத்து 600 கிலோ மீட்டருக்கும் அதிகமான இந்தியா-மியான்மர் எல்லையை பாதுகாக்க, மத்திய அரசு 31 ஆயிரம் கோடி ரூபாய் செலவில் பாதுகாப்பு வேலி அமைத்து வருகிறது என்றும், அவர் தெரிவித்தார். மேலும், ஜம்மு-காஷ்மீர், பஞ்சாப், உத்தராகண்ட், ராஜஸ்தான், குஜராத், பீகார், உத்தரபிதேசம், மேற்குவங்கம், மற்றும், வடகிழக்கு மாநிலங்கள் உள்ளிட்ட எல்லை மாநிலங்கள், மற்றும், யூனியன் பிரதேசங்களை சேர்ந்த காவல் கண்காணிப்பாளர்கள், இந்த மாநாட்டில் பங்கேற்றனர். பாதிக்கப்படக் கூடிய எல்லைப் பகுதிகளில் நிலவும் சூழ்நிலையை மதிப்பிடுவதன் மூலம், நாட்டின் எல்லைப் பாதுகாப்பு கட்டமைப்பை வலுப்படுத்துவதே இந்த மாநாட்டின் நோக்கம் என்று திரு. அமித் ஷா குறிப்பிட்டார்.

------------------------------

மோடி-நியூசிலாந்து (12)

பிரதமர் திரு. நரேந்திர மோடி, தமது 3 நாடுகளுக்கான சுற்றுப் பயணத்தின் இறுதி கட்டமாக இன்று, நியூசிலாந்தின் ஆக்லாந்த் சென்றடைந்தார். அங்கு அவருக்கு நியூசிலாந்து பிரதமர் திரு. கிரிஸ்டோஃபர் லக்சன், சிறப்பான வரவேற்று அளித்தார். 2 நாள் பயணமாக அங்கு சென்றுள்ள பிரதமர் திரு. நரேந்திர மோடி, வணிகம்,

வர்த்தகம், பாதுகாப்பு உள்ளிட்ட துறைகளில் 2 ஆண்டுகளில் இருநாடுகளுக்கும் இடையே ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தை திரு. லக்சனுடன் ஆய்வு மேற்கொண்டார். தமது பயணத்தின் ஒருபகுதியாக பிரதமர், அந்நாட்டு தொழில் முனைவோர் மற்றும் விளையாட்டு வீரர்களுடன் கலந்துரையாட உள்ளார். தொடர்ந்து இந்திய வம்சாவளியினரிடையே அவர் உரையாற்றுகிறார். 40 ஆண்டுகளுக்கு பின்னர் நியூசிலாந்து செல்லும் முதல் பிரதமர் திரு. நரேந்திர மோடி என்பது குறிப்பிடத்தக்கது.

-------------------------------

*__பிரல்ஹாத் ஜோஷி (9)__*

நாட்டின் 50 சதவிகிதத்திற்கும் அதிகமான மின்சாரத் தேவை, தொடர்ந்து 2ஆவது முறையாக, தூய்மையான எரிசக்தி மூலம் பெறப்பட்டதாக, புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் துறை அமைச்சர் திரு. பிரல்ஹாத் ஜோஷி இன்று தெரிவித்தார். கடந்த 6ஆம் தேதி, புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆதாரங்கள், 50.2 சதவிகித மின்சார வினியோகத்திற்கு பங்களித்துள்ளதாக, திரு. ஜோஷி, தமது சமூக ஊடகப் பதிவில் குறிப்பிட்டுள்ளார். இந்தியாவின் தூய்மையான எரிசக்தி சூழல் அமைப்பு, வளர்ந்து வரும் வலிமைக்கும், நம்பகத் தன்மைக்கும் ஒரு சான்றாக அமைகிறது என்றும், அமைச்சர் குறிப்பிட்டார்.

-------------------------------

__*புதுச்சேரி பத்திரிக்கையாளர்கள்* 1 (4)__

புதுச்சேரி அரசின் செய்தி மற்றும் விளம்பரத் துறை மற்றும் இந்திய அரசின் தகவல் ஒலிபரப்பு அமைச்சகத்தின் பத்திரிக்கை தகவல் அலுவலகம் ஆகியவை இணைந்து நடத்தும், பத்திரிக்கையாளர்களுக்கான ஒருநாள் சிறப்பு பயிலரங்கு இன்று காலை தொடங்கியது.

__*புதுச்சேரி பத்திரிக்கையாளர்கள்* 2 (16)__

__(வாய்ஸ்)__

செயற்கை நுண்ணறிவு மூலம் போலி செய்திகளை கண்டறிதல் என்ற தலைப்பில் நடைபெற்ற பயிலரங்கை சட்டமன்ற உறுப்பினர் திரு. ஜான்குமார் தொடக்கி வைத்தார். நிகழ்ச்சியில் பேசிய திரு. ஜான்குமார், இன்றைய பத்திரிக்கையாளர்களில் ஒருசிலர், செய்திகளை தவறாக வெளியிட்ட பின்னர், அந்த தவறுக்கு மறுப்பு செய்தி தெரிவிப்பதில்லை என்றும், பத்திரிக்கையாளர்கள் நாட்டின் மிக முக்கியமானவர்கள் என்றும், உண்மையான செய்திகளை மட்டுமே அவர்கள் பதிவு செய்ய வேண்டும் என்றும் வலியுறுத்தினார். இந்நிகழ்ச்சியில், தகவல் மற்றும் ஒலிபரப்பு அமைச்சகத்தின் தென்மண்டல இயக்குநர் திரு. பழனிசாமி, செய்தி மற்றும் விளம்பரத் துறை அரசு செயலர் திரு. முகமது Ahsan Abid, தகவல் மற்றும் விளம்பரத் துறை இயக்குநர் திரு. சுரேஷ்ராஜ், இந்திய தேசிய நெடுங்சாலை ஆணையத்தின் மண்டல அதிகாரி திரு. வீரேந்திர சம்பியால், சென்னை பத்திரிக்கை தகவல் அலுவலக இயக்குநர் திரு. அருண்குமார், கோழிகோடு பல்கலைக்கழக இதழியல் மற்றும் மக்கள் தொடர்பியல் துறை உதவி பேராசிரியர் திரு. ஹபீப் ரஹ்மான் ஆகியோர் கலந்து கொண்டனர். இப்பயிலரங்கில், சுமார் 100 பத்திரிக்கையாளர்கள் பங்கேற்றனர். நிறைவு விழாவில் முதலமைச்சர் திரு. ரங்கசாமி கலந்து கொண்டு பத்திரிக்கையாளர்களுக்கு சான்றிதழ்களை வழங்கி சிறப்பித்தார்.

------------------------------

நிதி ஆயோக் (13)

குழந்தை மைய வளர்ச்சி, பள்ளிக் கல்வி, மற்றும், மனித மேம்பாடு ஆகியவற்றில் ஒத்துழைப்பை வலுப்படுத்த வேண்டும் என்று, நிதி ஆயோக் உறுப்பினர் டாக்டர் ஜோரம் அனியா வலியுறுத்தினார். புதுடெல்லியில், இன்று நடைபெற்ற கலந்துரையாடல் நிகழ்ச்சியில், யுனிசெஃப் இந்திய பிரதிநிதி Cynthia McCaffray, மற்றும், அவரது தூதுக் குழுவினருடன் அவர் ஆலோசனை மேற்கொண்டார். இந்த கலந்துரையாடல் நிகழ்ச்சியில், கற்றல், அடிப்படை எழுத்தறிவு மற்றும் எண்ணறிவு, ஆசிரியர் கல்வி, மாணவர் நல்வாழ்வு, இணையப் பாதுகாப்பு, மற்றும், டிஜிட்டல் பாதுகாப்பு

ஆகியவற்றில் முக்கிய கவனம் செலுத்தப்பட்டதாக டாக்டர் ஜோரம் அனியா தெரிவித்தார். தொடர்ந்து பேசிய அவர், ஆதார் அடிப்படையிலான கொள்கை உருவாக்கம், சமூகப் பங்கேற்பு, குழந்தை நலன் மற்றும் கல்வி திறன்களை மேம்படுத்துவதில், மகளிர் சுய உதவிக் குழுக்களின் பங்கு ஆகியவை குறித்தும் அவர் விளக்கிக் கூறினார்.

-----------------------------

*பூபேந்தர் யாதவ்* (10)

மனித விலங்குகள் மோதல் சம்பவங்களை தடுப்பதற்கான நடவடிக்கைகள், உயர் முன்னுரிமையுடன் செயல்படுத்தப்பட வேண்டியதன் அவசியம் குறித்து, மத்திய சுற்றுச் சூழல் துறை அமைச்சர் திரு. பூபேந்தர் யாதவ் வலியுறுத்தியுள்ளார். கோவை மத்திய வன அலுவலர் பயிற்சி மையத்தில் நடைபெற்ற தேசிய கருத்தரங்கை இன்று தொடக்கி வைத்து பேசிய அவர், இது தொடர்பான விளக்கங்களையும் எடுத்துக் கூறினார். நிகழ்ச்சியில், இத்துறைக்கான இணையமைச்சர் திரு. கீர்த்தி வர்தன்சிங் பேசுகையில், மனித விலங்கு மோதலை தடுக்க, நவீன தொழில்நுட்ப முறைகளின் அவசியத்தை எடுத்துரைத்தார். முன்னதாக மனித விலங்கு மோதல் குறித்த தகவல் கையேட்டினை, அமைச்சர் திரு. பூபேந்திர யாதவ் வெளியிட்டார்.

-----------------------------

*பியூஷ் கோயல்* (8)

மத்திய வர்த்தகம் மற்றும் தொழில் துறை அமைச்சர் திரு. பியூஷ் கோயல் இன்று, புதுடெல்லியில், தேசிய உற்பத்தித் திறன் கவுன்சில், தொழில் மற்றும் உள்நாட்டு வர்த்தக மேம்பாட்டுத் துறை அதிகாரிகளுடன் நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்திற்கு தலைமை தாங்கினார். துறைகளுக்கு இடையிலான ஒத்துழைப்பை மேம்படுத்துதல், நிறுவனத் திறன்களை வலுப்படுத்துதல், மற்றும், உற்பத்தித் திறனை மேம்படுத்துவதற்கான

சிறந்த நடைமுறைகளை பின்பற்றுதல் ஆகியவை குறித்து, இந்த ஆய்வுக் கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்டதாக அவர் கூறினார்.

------------------------------

*பட்நவிஸ் (11)*

மஹாராஷ்ட்ரா மாநிலத்தில், பொது சிவில் சட்டத்தை கொண்டு வருவதற்கான வரைவு சட்டத்தை தயாரிக்க, உச்சநீதிமன்ற ஓய்வு பெற்ற நீதிபதி ரஞ்சனா தேசாய் தலைமையில், 7 உறுப்பினர்கள் கொண்ட குழுவை, அம்மாநில முதலமைச்சர் திரு. தேவேந்திர பட்நவிஸ் அறிவித்துள்ளார். அம்மாநில சட்டப் பேரவையில் இதனை தெரிவித்த அவர், அரசியல் சட்டம் மற்றும் மாநிலத்தின் கொள்கைகளின் அடிப்படையில், பொது சிவில் சட்டத்தை இந்த குழு தயாரிக்கும் என்று தெரிவித்தார். இது குறித்த அறிக்கையை இக்குழுவினர் 6 மாதத்தில் மாநில அரசிடம் சமர்ப்பிப்பார்கள் என்றும், அவர்கள் அளிக்கும் பரிந்துரைகளின் அடிப்படையில், பொது சிவில் சட்ட மசோதா தயாரிக்கப்பட்டு, குளிர்கால கூட்டத் தொடரில் நிறைவேற்றப்படும் என்றும், திரு. பட்நவிஸ் கூறினார்.

------------------------------

*க□லோர காவல் பட□ (8)*

புதுடெல்லியில் உள்ள கடலோரக் காவல் படை தலைமையகத்தில் இன்று ஒருநாள் மாநாட்டிற்கு ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தது. இதில் எதிர்கால கடலோர காவல் படை தளங்கள் குறித்து விவாதிப்பதற்காக, முன்னணி இந்திய கப்பல் கட்டும் தளங்கள், மற்றும், வடிவமைப்பு நிறுவனங்கள் ஒன்றிணைந்து, மேம்பட்ட கப்பல் வடிவமைப்பு, டிஜிட்டல் சரிபார்ப்பு, எதிர்கால பல்நோக்கு கடலோரக் காவல் படை கப்பல்களின் செயல்பாட்டு திறனை மேம்படுத்துதல் ஆகியவை குறித்து, விவாதங்கள் நடைபெற்றதாக பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்தது.

------------------------------

விளையாட்டு-கிரிக்கெட் (6)

பிரிஸ்டலில் நடைபெற்ற இந்திய-இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான 4ஆவது டி-20 கிரிக்கெட் போட்டியில், 9 விக்கெட் வித்தியாசத்தில், இங்கிலாந்து அணி வெற்றி பெற்று, தொடரை கைப்பற்றியது. 5ஆவது இறுதிப் போட்டி, சௌத் ஆம்டனில் நாளை நடைபெறுகிறது.

ஃபிஃபா உலகக் கோப்பை கால்பந்துப் போட்டியின் காலிறுதி ஆட்டத்தில், இன்றிரவு ஸ்பெயின் பெல்ஜியத்தை எதிர்கொள்கிறது.

-------------------------------